**Date : 17.03.2026**

**SC.No.53/2022**

**P.W. 3 திரு.** அர்ஜூனன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

A3 ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. A6, A7 Died, மற்ற எதிரிகள் ஆஜர்.

**குறுக்கு விசாரணை :**

1. எனது ஊர் பெருமாள் கோயில் பட்டி என்றால் சரிதான். அந்த ஊரில் இருந்து அணைக்கரைப்பட்டிக்கு வரவேண்டும் என்றால் இருசக்கர வாகனத்திலோ, காரிலோ வர வேண்டும் என்றால் சுமார் அரை மணி நேரம் ஆகும். அன்றைய தினம் நான் எனது ஊரில் இருந்து அணைக்கரைப்பட்டிக்கு எனது இருசக்கர வாகனத்தில் வந்தடைந்தேன். சம்பவத்தன்று எங்கள் ஊரிலும் பொங்கல் திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான்.

2. எங்கள் ஊரில் நடைபெற்ற பொங்கல் திருவிழாவிற்கு நான் கலந்து கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது நான் அணைக்கரைப்பட்டிக்கு எதற்காக வந்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் அது பற்றி போலீசார் என்னிடம் கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை. முதன் முதலில் ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்குத்தான் நாங்கள் சென்றோம். ஆண்டிபட்டி மருத்துவமனையில் எப்போது சம்பவம் எங்கே நடந்தது யாரால் நடந்தது யார் யாருக்கு காயம் ஏற்பட்டது என்பது குறித்து சொன்னோமா என்றால் அது பற்றி மருத்துவர்கள் கேட்கவில்லை.

3. எனக்கு ஆங்கிலம் ஓரளவிற்கு படிக்கத் தெரியும். மருத்துவரிடம் சம்பவயிடம் குள்ளபுரம் பிரிவு, அணைக்கரைப்பட்டி மருத்துவரிடம் சேர்வதற்கு முன்பாக கால் மணி நேரம் முன்பாக சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் மருத்துவர் அது பற்றி என்னிடம் கேட்கவில்லை. ஒரு அடையாளம் தெரியாத நபர் கூர்மையான ஆயுதம் வைத்து தாக்கப்பட்டதாக

குள்ளபுரம் பிரிவில் வைத்து சம்பவம் நடந்ததாக மருத்துவரிடம் சொல்லி உள்ளோம் என்றால் சரியல்ல. அவ்வாறு தான் மருத்துவரிடம் சொல்லி உள்ளோம் என்றும், தற்சமயம் நீதிமன்றத்தில் வேண்டும் என்று போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்யாக சாட்சிய மளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. குள்ளபுரம் பிரிவிற்கும், ஊர் மந்தைக்கும் எவ்வளவு தூரம் இருக்குமென்றால் 50 மீட்டர் அளவு, நீதிமன்ற கட்டிடத்தின் நுழைவாயில் இருந்து நீதிமன்ற அறைக்கு வரும் தூரம் என சாட்சி குறிப்பிடுகிறார். குள்ளப்புரம் பிரிவிற்கும், மயான கரைக்கும் இடையே சுமார் 2 கிலோமீட்டர் தூரம் இருக்குமா என்றால் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். போலீஸ் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் நவீன் குமாரின் செல் போன் நம்பர் 9659090871 என்று எனக்கு நம்பர் தெரியும் என்ற விபரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் அது பற்றி போலீசார் என்னிடம் கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை.

5. சம்பவதினத்தன்று 06.00 – 07.00 மணியளவில் அணைக்கரை பட்டியில் நிழற்கூடையில் உட்கார்ந்து அ.சா.2 மற்றும் 4 இறந்து போனவருடன் மது அருந்தி கொண்டிருந்தேன் போலீசார் விசாரிக்கும் போது நான் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதேபோல் போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது என்னை ஜெகதீஷ், சசிகுமார் என்னையும் மற்ற எதிரிகள் பிடித்துக் கொண்டார்கள் என்று சொல்லி உள்ளேன். ஒரு பக்கம் சிவக்குமாரும், மறுபக்கம் செல்வமணியும் இறந்து போன நவீன் குமாரை பிடித்துக் கொண்டார்கள் என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன்.

6. யார் யார் எந்தெந்த பைக்கில் வந்தார்கள் என்ற விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் போலீசார் அதை பற்றி விசாரிக்காததால் சொல்லவில்லை. அந்த வண்யின் மாடல், பதிவு எண் எனக்கு எப்போதும் தெரியாது என்றால் நீதிமன்றத்தில் கேட்ட பொழுது நான் சொல்லி

உள்ளேன். போலீசார் அது பற்றி கேட்காததால் நான் அதை பற்றி சொல்லவில்லை.

7. சம்பவ இடத்தில் இரண்டு மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தது, அந்த வெளிச்சத்தில் என்னால் எதிரிகளை அடையாளம் காண முடிந்து என்று நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலீசார் அது பற்றி கேட்காதால் அது பற்றி சொல்லவில்லை. சம்பவ இடமான சுடுகாட்டு அருகில் மின்விளக்குகளுக்கு பல்பே கிடையாது என்றும் இரவில் மின் விளக்கும் எரியவில்லை என்றும், வெளிச்சம் இருந்ததாக சொல்வது போலீசார் சொல்லிக் கொடுத்து பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

8. எனது உடைகளில் சம்பவத்தன்று ரத்தக்கறை படிந்தது, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது மருத்துவமனையிலேயே எனது சட்டையை கழட்டி தூக்கி போட்டு விட்டார்கள் என்பதால் அந்த சட்டையை போலீசாரிடம் ஒப்படைக்க இயலவில்லை. சம்பவ சமயத்தில் நான் கையில் செல்போன் வைத்திருந்தேன் என்றால் என் கையில் செல்போன் இல்லை எனது மனைவியிடம் கொடுத்திருந்தேன். இறந்தவர் அன்றைய தினம் சட்டை எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல, போட்டிருந்தார்.

9. சட்டையுடன் தான் அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாரா என்றால் அவர் வெறும் உடம்புடன் தான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.குள்ளபுரம் பிரிவு அருகே ஆற்றுப்பாலம் உள்ளதென்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு ஊர்காரர்கள் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை மறித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் மயான கரையில் இறந்த நவீன் குமார் உடன் நாங்கள் மது அருந்தி கொண்டிருந்ததாக சொல்வது பொய் என்றும், அன்றைய தினம் குள்ளபுரம் பிரிவில் அடையாளம் தெரியாத வேறு நபரால் தாக்கப்பட்டதை பயன்படுத்திக் கொண்டு இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தி

பொய்யாக எதிரிகளுக்கு, எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை மறுநாள் விசாரணை செய்தார்கள்.

11. க.விலக்கு அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரிக்கச் செய்தார்கள். அவ்வாறு விசாரணை செய்யும்போது மதியத்திற்கு முன்பு என்னிடம் விசாரணை செய்தார்கள். அவ்வாறு என்னை விசாரிக்கும் பொழுது இறந்தவரின் தந்தை உடன் இருந்தாரா என்றால் அவர் உடன் இல்லை. எனக்கு எதிரிகளின் தகப்பனார் பெயர் தெரியாது. அவர்கள் எந்த தெருவில் எந்த ஊரில் குடியிருந்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, குள்ளபுரம் என்று ஊர் மட்டும் தெரியும், அவர்கள் குடியிருக்கும் பகுதி தெரியாது.

12. எதிரிகளின் பெயர் மற்றும் அவரின் அப்பா பெயர் மற்றும் அவர்கள் குடியிருக்கும் விபரங்கள் எனக்கு மற்றவர்கள் சொல்லி தெரியும் என்றால் சரியல்ல. எனது ஊருக்கும், சம்பவம் நடந்த ஊருக்கும் வெகு தூரம் என்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு சம்பவத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரியல்ல. போலீசாரும், அ.சா.1 புகார்தாரரும் சொல்லிக் கொடுத்து எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.17 16:00:21 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.